உ
சிவமயம்



யாழ் மண்டைதீவு உயர் சைவ வேளாண்குல திலகரும்
பிரித்தானியா - பேர்மிங்கத்தை வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர் திரு தம்பிஐயா மதியழகன் அவர்கள்

## இறைபதம் எய்தியமை குறித்த நினைவு

# சிலாசாசனம்

05.09.2016

In Loving Memory of

# Late Mr. Thambyiya Mathiyalagan

# சமர்ப்பணம்

அன்பின் சிகரமாய்

பாசத்தின் உறைவிடமாய்

என்றும் இளமை குன்றா

இளநகை பூத்தவனாய்

எப்போதும் எல்லோரால்

இனிதாகப் பேசப்படுபவனே

இன்று நீ மட்டும் - எமைப்

பிரிந்து எங்கு சென்றாயோ

உன் சரீரம் மட்டுமே

இன்று இங்கு இல்லையடா

மதி எனும் உன்திருநாமம்

என்றும் ஓயாது — உறங்காது

அழியாது — ஒலிக்குதடா!

முகப்பு வயல்முருகன் தாள்பணிந்து

அவனைச் சரண் அடைந்த

அமரர் மதியழகனுக்கு - இந்நினைவு

பாமாலைதனை சமர்ப்பணம்

செய்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இங்கனம்

மனைவி, மகள்

மற்றும் குடும்பத்தினர்

உ



அன்னை மடியில்

01 * 02 * 1966

ஆண்டவன் அடியில்

06 * 08 * 2016

# அமரர் திரு தம்பிஐயா மதியழகன்

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த ஆடித்திங்கள்
பூண்ட பூர்வ பக்க சதுர்த்திதனில் - மாண்பு
தம்பிஐயா மைந்தன் மதியழகன் ஐயன்
எம்பிரான் கழலடைந்தான் காண்



**விநாயகர் வணக்கம்**

திருச்சிற்றம்பலம்

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத்துயரம் போம் - நல்ல
குணமதிக மாமருளைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதற் கால்

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தாரமார் புத்திரராந் தாம்தாம் ஆரே
வந்தவா றெங்கனே போமாறேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம்
சந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவம் திளைக்கும் செந்தீ
எந்தையார் திருநாமம் நமச்சிவாயவென்
றழுவார் இருவிசும்பில் இருக்கலாமே.

## திருவாசகம

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை அகத்தமர்ந் தினிய
பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி இணை மேல்
ஆலயம் பாகின் அனைசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாய் பாடும் அடியவர்க் கெல்லாம்
சிவபதம் குறுகிநின் றாரே.

## திருப்பல்லாண்டு

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

காலனிடத்தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத்திய ஞானத் தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
சோலை மலைக்குரியானே சுவாமி மலைப்பெருமாளே.

## வாழ்த்து

மறையொடு சைவம் வாழ்க மானிலம் செழித்து வாழ்க
கறைமிடற் றண்ணலார்தம் அடியவர் இனிது வாழ்க
பொறையொடு வாய்மை போற்றிப் புவியினில் மாந்தரெல்லாம்
பிறைதவழ் சடையினாரின் அருளினால் நீடுவாழ்க.

திருசிற்றம்பலம்.

## அமரர் மதியழகன் வாழ்க்கைப்பயணத்தில் ...

சிவபூமி என்று திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கைத்தீவின் வடபகுதித் தலைநகராம் யாழ்ப்பாணத்தின் தென்புறமாக ஐந்து மைல் தொலைவில் அமைந்ததுதான் ஷப்த தீவுகளின் தலைத்தீவாம் மண்டைதீவு. உள்ளத்தால் ஒன்றுபட்டு உயர்வாய் வாழும் உழைப்பாளர்களும், கற்றறிந்த பெரியோர்களும் கலந்து களிப்புடன் வாழும் இவ்வூரில் நீர்வளமும், நிலவளமும் நிறைந்து விவசாயத்துடன் மீன்பிடியும் நிகரற்றிருக்கும். சைவமும் கிறிஸ்தவமும் சேர்ந்து இங்கு சமரசம் பேசி நிற்கும். இத்தகைய வளம்மிக்க சிற்றூரில் உயர்சைவ வேளாண்மரபில் உதித்தவர்தான் அமரர் தம்பிஐயா மதியழகன்.

உயர் சைவ வேளாண்குல திலகர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம் மண்டைதீவு வட்டாரம் ஏழுதனில் வசித்து வந்த நாளினிலே வேலணையூர் முத்தம்மா எனும் நல்லாளை மணந்து தம்பிஐயா எனும் தனயனைப் பெற்றெடுத்தார். கட்டழகன் தம்பிஐயா காளைப்பருவமெய்தி மண்டைதீவுப் பகுதி சேர்ந்த கந்தையா யோகம்மா தம்பதியரின் கட்டழகுப் பாவையவள் பவளம்மாவை காதலித்து கடிமணம் புரிந்து கொண்டார். இவர்கள் இல்லறத்தின் நற்பயனாய் எழுவர்தமை நன்மக்களாய் பெற்று பாராட்டி, சீராட்டி வளர்த்து வந்தார்கள்.

முன்னவன் அமரர் திரு நடராஜாவோடு ஏந்திழையாள் கன்னிகா பரமேஸ்வரியும், சீர்பெற்று சிவப்பேறடைந்த சிவபூசணியும், கனிதரும் பேச்சாளன் வர்த்தகனாம் மயூரனுடன் தேன்மொழியாள் தேவராணியும், என்றும் ஆணழகன் இவ் அமரன் மதியழகனோடு, பல்கலையும் கற்றுத் தேர்ந்த பாவையவள் தயாநிதியும் அன்னார் தம் உடன் பிறப்பாம் அன்னாரின் உடன்பிறப்பாப் பெற்ற செல்வம் என்றழைத்து சிவப்பேறடைந்த சத்தியபாலனுடன் நல்லாசிரியையாம் இராஜேஸ்வரியும் தெவிட்டாத பேச்சாளன் செல்லத்துரையும் சுந்தரனாம் மோகனராஜனும் மைத்துனர், மைத்துனியாம்.

இளநகையுடன் என்றும் தன் இளவயதுக் கல்விதனை மண்டைதீவு மகாவித்தியாலத்தில் இனிதாகக் கல்வி கற்று வந்த அமரர் மதியழகன் ஒவ்வோர் ஆசிரியர் மனங்களிலும் எளிதில் இடம்பிடித்த இனிமையான மாணவனாம். குறிப்பாய் அந்தோனிப்பிள்ளை ஆசிரியையின் ஆருயிர் மாணவன். எல்லாக் கலைகளையும் ஒருங்கே பெற்றிருந்தான். சங்கீதம் பாடச் சிறந்த சாரீரம் கொண்டிருந்தான். தடகளப் போட்டியகளில் தனித் தடம் பதித்து நின்றான். மரதன் ஓட்டத்தில் மற்றவரை மண்டியிடச் செய்திடுவான். சிறப்பாய் இருந்த வீரன் இளவயதில் தன்தந்தையை இழந்து தன் தமையனுடன் சேர்ந்து தன் குடும்பச் சுமைகளைத் தன் தோள்களிலே தாங்கிக் கொண்டான். சிறந்த விவசாய வீரனவன். காலக் கொடுமையினால் மண்டைநகரை விட்டு மக்கள் வெளியேறி விட்டார்கள். இவ்வேளைதனில் இவ்வீரன் வீறுநடைகொண்டு கடல் கடந்து தன் குடும்பத்தைக்

காப்பதற்காய் வானில் பறந்து சென்றான். பிரித்தானியாவில் பேர்மிங்கம் நகரினிலே "அஸ்டா" என அழைக்கும் சிறப்புச்சந்தையிலே அல்லும், பகலும் அயராது உழைத்து நின்றான்.

கட்டழகன் மதியழகன் காளைப் பருவம் எய்தி கன்னியவள் வதனி எனும் ராதாவை காதலித்து கரம்பிடித்தான். கட்டழகி அவளோ கப்பல்கள் வந்து நின்று கவிபாடும் காங்கேசன்துறை சார்ந்த நல்லான் நடராஜாவிற்கும் என்றும் எழில் பூத்துத் திகழும் இணுவில் பதிசேர்ந்த ஏந்திழையாள் மனோறஞ்சிதத்திற்கும் சிரேஸ்ட மகளானாள். வித்தகனாம் குகனுடன், மேதகு சாந்தினியும், சிரிப்பழகி ஜெயந்தினியும், சொல்லழகன் மோகனராஜ், பாசமிகு பரதன், கொஞ்சு, தமிழ் பேசும் குமுதினியுடன் அமுதாய் நின்ற அமுதனும் அமரரின் மனைவி வழி வந்த மைத்துனர் மைத்துனியாம்.

கட்டழகன் மதியவனும் ராதாவும் கருத்தொருமித்த வேளைதனில் மொட்டாய், சிட்டாய் மலர்ந்தது தான் சௌமியா என்றழைத்த பட்டாம் பூச்சி. இப்பட்டாம் பூச்சி என்றும் தன் அப்பாவை சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்திடுவாள். இவ்வாறு இன்ப வாழ்வுதனை இனிதாக விருந்தோம்பி இன்புற்றிருக்கையிலே எங்கிருந்தோ வந்ததுதான் இக்கொடிய நோய். என்றும் புன்னகை பூத்த அவன் வதனம் இக்கொடிய நோயின் பெயர் கேட்டு பொலிவிழந்து போனது. இடி போன்று எங்கள் செவிகளில் இறங்கியது. அச்செய்தியால் நாம் செய்வதறியாது செயலிழந்து நின்றோம். இக்குறுகிய காலத்துள் அன்பன் அமரன் மதியவனும் இங்கு தன் கடமை முடித்து விட்டு "முருகா" என்றழைத்து முகப்பு வயல் முருகன்தாள் பற்றிக் கொண்டான். அன்னார் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## மனையாள் மனக்குமுறல்

என் அப்பனே மதியே
என்றுநான் காண்பேனோ
மூச்சுக்கு முந்நூறு தடவை
மதி என்றழைத்திடுவேன்
ஏனைய்யா நீ இன்று — எனை
ஏமாற்றிச் சென்றுவிட்டாய்
உன்னருமைச் செல்வமும் - நானும்
இங்கு திக்கற்று நிற்கின்றோம்
என் மதி (யை) இழந்து நான்
பித்துப் பிடித்து பிதற்றியழுகின்றேன்
எப்போ என்னருகில் - என்
(நிம்) மதியே நீ வருவாய்

## ஆருயிர் மகளின் ஆதங்கம்

என் ஆசை அப்பாவே! எங்கே நீ சென்றாய்
அப்பா என்று ஒருமுறை அழைத்தாலே ஓம் என்று
சொல்லிடுவாய் இப்போ ஓராயிரம் முறை
அப்பா என ஓலமிடுகின்றேன். ஏனப்பா
நீங்கள் என்னிடம் வரவில்லை. என்
அருமை அப்பாவே கறையில்லா உங்கள்
அன்புடலை அந்தக் கறையான் அரித்துச்
சென்றதப்பா. நன்றாக நான் படித்து
நற்சேவை செய்திடுவேன் என்றும் உங்கள்
ஆசிதனை எனக்குத் தாருங்கள் அப்பா.

## அண்ணன் உள்ளக் குமுறல்

என் அருமைத் தம்பியே எங்கேயடா நீ சென்றாய்
அண்ணா என நீ அழைத்தால் இன்னுமொரு தடவை
அண்ணா என அழைக்க மாட்டாயோ என்று நானும்
ஏங்கி நிற்பேனே என் அழகு அருமைத் தம்பியனே
ஏனப்பு எனை ஏமாற்றிச் சென்றுவிட்டாய்
பொல்லா இப்பூமியிலே வாழ்ந்தது போதும் என்று
நீ வானுலகம் சென்றாயோ ஏன்அப்பு நீ
இன்று எனை இடைநடுவில் விட்டுச் சென்றாய்
ஆற்றாமை நான் கொண்டு அலறுகின்றேன் - அந்த
ஆறுமுகன் அடியினை நீ அணைத்துக் கொண்டாயோ.

## அக்காமார் புலம்பல்

எங்கள் அருமைத் தம்பியே எங்கே அப்பு நீ சென்றாய்
ஓயாது ஒவ்வொரு நாளும் தொலைபேசியிலே
என்ன புதினங்கள் என்று எமைக் கேட்டிடுவாய்
இன்று எப்படியடா உன் திருவாய் மௌனித்துக்
கிடக்கின்றது எங்கள் செல்லக்குட்டியனே
ஏனடா நீ எமைமறந்து எட்டாத்தூரம்
சென்றாய் ஆறாது, ஆற்றாது நிற்கின்றோம்
எங்கள் ஆருயிர்த்தம்பியே.

## அன்புத் தங்கையின் அலறல்

என் அன்பு அண்ணாவே! என் ஆசை மதி அண்ணாவே
என்றும் என்னுடன் நீ இருப்பாய் என்றுதானே
உன்னிடம் நான் ஓடி வந்தேன் - ஏன் அண்ணா
என்னை நீ இடைநடுவில தவிக்கவிட்டு
ஏமாற்றிச் சென்றுவிட்டாய்
ஐயனும் அம்மையும், அன்புச் சின்னக்காவும்
உனை அழைத்துக் கொண்டனரோ
என் கைத்தொலைபேசி இங்கு
மௌனித்துப் போனதண்ணா
என் அண்ணன் அடிக்கின்றான்- என்று
நான் ஆசையாய் ஓடிடுவேன்
ஓராயிரம் கதைகள் பேசும் - உன்
செவ்வாயும் இன்று செயலிழந்து
போனதண்ணா! கர்ப்பூரமாய்
கரைந்தவனே இன்று காற்றாகிப்
போனாயோ ஏழேழு ஜென்மம் - என்று
ஒன்று இருந்திட்டால் என்றும் உன் அன்புத் தங்கையாக நானும்
உடன் பிறந்திடுவேன்.

## மருமக்கள் புலம்பல்

எங்கள் சின்ன மாமாவே எங்கே போனீங்கள்
எங்கிருக்காய் ஒருக்கால் எழுந்து "அலோ" சொல்லிடுங்கள்
எட்டி எட்டிப் பார்க்கின்றோம் ஏன் மாமா வரவில்லை
ஏமாற்ற வேண்டாம் மாமா ஓடி வந்திடுங்கள்

## பெறாமக்கள் புலம்பல்

எங்கள் சித்தப்பாவே எங்கே போனீர்கள்
ஏங்கித் தவிக்கின்றோம் எங்களிடம் வாருங்கள்
உங்கள் களைமுகம் கண்டு நாங்கள்
ஓடி வந்திடுவோம். எங்களுக்காய் ஒருமுறை
நீங்கள் எழுந்து வந்திடுங்கள்.

நண்பனின் மாறாத் துயரம்

மதி அண்ணா, மதி அண்ணா என்று அன்புடனும் ஆசையுடனும் அழைத்த மதி அண்ணா இன்று என்னை ஆழாத் துயரத்தில் விட்டு விட்டு அவர் மட்டும் எங்கேயோ சென்றுவிட்டார். ஆனாலும் அவர் இப்போதும் எங்களுடன் இருக்கின்றார் என்றொரு நினைப்பு.

எனக்கு அவரை 2001 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். நல்லதொரு மனிதன், நல்லதொரு நண்பன். முன்னின்று உதவி செய்வதில் அவருக்கு நிகர் யாரும் இல்லை எனலாம். ஆம் மற்றவருக்கு மனம் கோணாமல் உதவி செய்வதில் வல்லவர். அவரது நண்பர்களுக்கு ஏதாவது பிரச்சனை வந்தால் உடன் முன்னின்று பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் வல்லவர். எனக்குப் பண உதவி, தொழில் உதவி போன்றவற்றில் எவ்வளவோ உதவிகளைச் செய்ததை என்னால் மறக்க முடியவில்லை.

மதி அண்ணா ஒரு கம்பீரமான தோற்றமும் நல்ல பலசாலியுமாவார். அத்துடன் நகைச்சுவைகள் சொல்லி சுற்றி இருப்பவர்களைச் சிரிப்பில் ஆழ்த்துவார். சினிமாப் பாடல்களையும், இயக்கப் பாடல்களையும் சொற்களை மாற்றிப் புதுமெட்டுப் போட்டு பாடுவதில் வல்லவர். Birmingham மதி என்று தீபம் தொலைக்காட்சியில் பங்குபற்றும் எல்லா நிகழ்ச்சிகளிலும் இதே மதி அண்ணாதான் பார்ப்பவர்களைப் பூரிப்பில் ஆழ்த்துவார்.

*"உன் பிரிவை ஏற்க முடியவில்லையே மதி அண்ணா*
*எனைப்போலொரு தெய்வப் பிறவி எனக்கு*
*நண்பனாகக் கிடைத்ததற்கு என்ன தவம் நான் செய்தேனோ...*
*மதி அண்ணனின் பிரிவு யாவருக்கும் வேதனையே!*
*அன்னாரின் ஆத்ம சாந்தியடைய யாவரும் பிரார்த்திப்போமாக"*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

### தேற்றம் - பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரும்(ம்) மற்றுலகும் - முடிவில் ஒரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்று இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாறில்லையே.

சுபம்.

உ

சிவமயம்

# விநாயகர் அகவல்



## காப்பு

அற்புதவி நவயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்
சொற்கொருளெல் லாங்கடந்து தூய்தாம் மெஞ்ஞானமிகு
கற்பக விநாயகன்றான் காப்பு.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி

மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடையிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவினை லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
இருள்வெளி யிரண்டிக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்

# சகலகலாவல்லி மாலை

1. வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
உண்டானுறங்க ஒழித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே

2. நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்கையாசனத்தள்
கூடும் பசும்பொற்கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே

3. அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே

4. தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்கும் செந்தமிழ் செல்வமும்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலா வல்லியே

5. பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே

6. பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயயெழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமென்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே

8. சொல்விற் பனமு மவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்
வாய் நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால்
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெரும் செல்வப் பேறே
சகலகலா வல்லியே

9. சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்கும் சரத்தின் பிடியோ
அரசன்ன நாணநடை
கற்கும் பாதாம் புயத் தாயே
சகலகலா வல்லியே

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேம்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி
உண்டேனும் விளிம்பிலுன் போற்றி
கண் கண்ட தெய்முளதோ
சகலகலா வல்லியே!

சகலகலா வல்லிமாலை முற்றிற்று.

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

# மங்கள ஆராத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெய மெங்கும் அமைதியைத் தா (ஓம் ஸ்ரீ)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய – அம்மம்மா
தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட பணிப்பாய்
அன்பில் என்னை (ஓம் ஸ்ரீ)

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி தேவியுன்
அடைக்கலமே (ஓம் ஸ்ரீ)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – ஞான
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா (ஓம் ஸ்ரீ)

## மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை
அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சிவைக்கு மங்களம்

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும்என் வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்தலைந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க் கனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும்ஓங்க என்கரத் தியற்கையான சித்தியைத்
தந்துஞான மூர்த்தியாய்த் தனித்துவைத்த சக்தியாம்
நாமகீர்த் தனம்பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம்பொங்கி வீடெல்லாம் விளங்கவும்
ஞானதீப மேற்றியென்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம்கொண் டாடுவோம்.

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்தி சக்தி மங்களம் சர்வ சக்தி மங்களம்
சீதா ராமா மங்களம் ராதாக்ருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுபமங்களம்.

நம பார் வதீ பதயே
அர ஹர மகா தேவா

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க.

*திருச்சிற்றம்பலம்*

# நன்றி நவில்கின்றோம்

***"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்நன்றி கொன்ற மகற்கு"***

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைக்கு ஒப்பாக எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு நோயுற்றிருந்த வேளைதனில் வைத்திய உதவி செய்த வைத்தியர்கள், தாதிமார்களிற்கும் அன்னார் வைத்தியசாலைகளில் இருக்கும் வேளைதனில் அவரின் உற்றார், உறவினர், இனிய நண்பர்கள் யாவருக்கும், அன்னாரின் அந்திமச் சடங்குதனை சிறப்பாக நடாத்தி தந்த அனைத்து நல் உள்ளங்களிற்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் எங்கள் குடும்பத்தார் உள்ளம் நெகிழ்ந்து நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

**இங்கனம்**
**மனைவி, மகள், மற்றும்**
**குடும்பத்தினர்**



# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Designed & Printed @ JR Print
Tel: 020 8503 6643